**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.84/2022
Prosecution witness.1

| | |
|---|---|
| பெயர் : வினோத் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :ராமையா | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

05.03.2026

(3ம் எதிரி ஆஜர். 1, 2, 4, 5 ஆகிய எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4, 5 ஆகிய எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலீசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

எதிரிகள் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும் போலீசார் விசாரித்தபோதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசாரிடம் வாக்குமூலம் அளித்தேன். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். TELC சர்ச்சில் நானும் எதிரிகளும் உறுப்பினர்களாக உள்ளோம் என்றால் சரிதான். பிஜப் தேர்தல் சம்மந்தமாக கடந்த 11.07.2018ம் தேதி சர்ச்சில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது என்றால் சரிதான். அந்த ஆலோசனை கூட்டத்திற்கு தலைவராக பாஸ்டர் ஜெயபாலன் டேவிட் என்பவர் இருந்தார். அந்த ஆலோசனை கூட்டத்தில் மொத்தம் 6 நபர்கள் இருந்தார்கள். சுரேஷ்மாணிக்கம், வினோத், தவசி வளவன், ஜெபராணி ஆகியோரும் நானும் சர்ச்சிற்குள் இருந்தோம். சர்ச்சிற்கு வெளியே 5, 6 நபர்கள் இருந்தார்கள்.

2. நான் மருத்துவமனையில் இருந்தபோது ஒரு writter இரவு 07.00 மணியளவில் வந்து என்னை விசாரித்தார். அவர் தான் வாக்குமூலம் பதிவு செய்தார். சர்ச்சிற்கு அருகிலேயே மருத்துவமனை அமைந்துள்ளது. அதனால் 2 நிமிடத்திற்குள் மருத்துவமனைக்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். என்னை மங்களேஸ்வரன் மற்றும் இன்னொரு நபர் சேர்ந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் மயக்க நிலையில் இருந்ததால் அந்த இன்னொரு நபர் யார் என்று தெரியவில்லை. நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தபோது என்னுடன் வேறு யாரும் இல்லை. நான் அளித்த வாக்குமூலத்தை போலீசார் எனக்கு படித்துக் காண்பித்து சரியாக இருந்தது என்பதை தெரிந்து கொண்டு நான் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

3. அன்றைய தினம் நான் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்த பின்னர் மீண்டும் என்னை போலீசார் விசாரிக்கவில்லை. சர்ச்சிலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடங்களில் சென்று விடலாம் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு காயம்பட்டிருந்ததால் நான் முதலில் மருத்துவமனைக்கு சென்றேன். எனக்கு வலது பக்க நெற்றிக்கு மேல் பகுதியில் கீறல் காயம்பட்டு இரத்தம் கசிய ஆரம்பித்து அந்த இரத்தம் எனது சட்டையை நனைத்தது. மருத்துவர் என்னை விசாரித்தபோது யாரால் எவ்வாறு எந்த இடத்தில் எனக்கு காயம் பட்டது என்பதை மருத்துவரிடம் கூறினேனா என்றால் ஆமாம் கூறினேன்.

4. சம்பவத்தின் போது சர்ச்சின் பாதிரியார் ஜெயபாலன் டேவிட் அங்கு தான் இருந்தார். புகார் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் மேற்படி பாதிரியார் இருந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். TELC சர்ச்சில் தேர்தல் வந்தாலே இரு பிரிவினராக சண்டை வருவது வழக்கம் என்றால் சரிதான். பிரின்ஸ் பிரபுதாஸ் என்பவர் எனக்கு வேண்டிய நபரா என்றால் எனக்கு தெரிந்தவர். அவர் சர்ச்சில் ஒரு உறுப்பினராக இருந்து வந்தார். தேர்தலுக்கு உறுப்பினர் சேர்க்கை சம்மந்தமாக அனறைய தினம் சர்ச்சில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த சர்ச்சில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது தொடர்பாக ஆலோசிக்க உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான்.

5. இந்த வழக்கின் எதிரிகளான கருப்பையா, ஜெபராணி, ஆனந்தராஜ் (1, 4, 5 எதிரிகள்) ஆகியோர்களை பிரின்ஸ் ஜெபராஜின் தூண்டுதலின் பேரில் நானும்

மங்களேஸ்வரனும் சேர்ந்து தாக்கியதாகவும் அவர்களில் ஜெபராணியை தலைமுடியை பிடித்து நாங்கள் இழுத்ததாகவும், அங்கிருந்த நாற்காலிகளை உடைத்ததாகவும் எங்கள் மீது இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுகிற அதே நாளில் முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் குற்ற எண்.141/2018 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. எங்கள் மீது புகார் அளித்தவர் தவசி வளவன் என்றால் சரிதான். அவர் சர்ச்சில் செயலாளரா அல்லது பொருளாளரா என்பது எனக்கு நினைவில் இல்லை. ஆனால் பொறுப்பில் இருந்தார். அந்த வழக்கில் தவசி வளவனுடன் சமாதானம் பேசி நாங்கள் இருவரும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததன் பேரில் வழக்கு முடிவடைந்தது என்றால் சரிதான். நான் கூறியபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நானும் மங்களேஸ்வரனும் சேர்ந்து குற்றச் செயல் செய்துவிட்டு அதை மறைக்கும் விதமாக எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்யான சங்கதிகளை உருவாக்கி எனக்கு நானே காயத்தை ஏற்படுத்திக் கொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.